**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர் – திசம்பர் 2018**

**P203 படைப்பிலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. யாப்பு வடிவத்திற்கு அடிப்படை எது?
2. தொன்மம் என்றால் என்ன?
3. புதுக்கவிதையின் வளர்ச்சிக்குப் பங்காற்றிய இதழ்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
4. பரிபாடலின் அடி வரையறை யாது?
5. முதல் நாவல் எது? அதன் ஆசிரியர் யார்?
6. செய்யுள் வடிவில் கதைக் கூறும் இலக்கியங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
7. கதைப்பின்னலின் இருவகைகள் யாவை?
8. தலித் நாவல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
9. இராஜம்கிருஷ்ணனின் சிறுகதைகளுள் இரண்டினைக் குறிப்பிடுக.
10. இறையன்பு எழுதிய சிறுகதைகளுள் இரண்டினைக் குறிப்பிடுக.
11. சிறுகதை மன்னன் எனப் போற்றப்படுபவர் யார்?
12. ஞானபீட விருது பெற்ற அகிலனின் நாவல் எது?
13. பேரறிஞர் அண்ணாவின் சிறுகதைகளுள் இரண்டினைக் குறிப்பிடுக.
14. தமிழ் நாடகத் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?
15. கூத்துப்பட்டறை நாடகக் குழுவினை நடத்தியவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

**(5x3=15)**

1. இடைக்கால இலக்கியங்களின் பாடுபொருள்களை விவரிக்க.
2. ஐக்கூ கவிதைகள் குறித்து இயம்புக.
3. பெண்ணிய நாவல்கள் குறித்து இயம்புக.
4. நாவல் இலக்கியத்தின் பாத்திரப்படைப்பு குறித்து எழுதுக.
5. பின்நவீனத்துவ நாவல்கள் குறித்து விவரிக்க.
6. புதுமைப்பித்தனின் பால் வண்ணம் சிறுகதையின் கதைக்கரு குறித்து இயம்புக.
7. உரைநடையின் வகைகள் குறித்து புலப்படுத்துக.
8. குறவஞ்சி நாடகம் – குறிப்பு வரைக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) உரையாசிரியர்களின் தமிழ்ப்பணியை மதிப்பிட்டுரைக்க.

2. (அ) தற்காலத் தமிழ் நாவல்களின் போக்குகள் குறித்து விவரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) தற்காலத் தமிழ் நாடகங்களைப் பற்றி விளக்கியுரைக்க.

3. (அ) தமிழில் தொடக்க கால சிறுகதைகளின் போக்குகளை ஆய்ந்துரைக்க.

(அல்லது)

(ஆ) சங்க இலக்கியங்களின் பாடுபொருள்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

***